IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.159 /2012
Deposition of witness for DW1

Name : உமா மகேஸ்வரி

Husband Name : சந்திரன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 20 day of December, 2022.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பி.வா.சா.ஆ1 -ஐ கடந்த 28.9.2007-ல் வட்டாட்சியர் எனக்கு வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ1-ல் பட்டா எண்.601 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி பி.வா.சா.ஆ1-ஐ நன்கு பார்த்துவிட்டு இல்லை என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.2 யாரிடமிருந்து எந்த வருடம் நான் பெற்றேன் என்றால், சாட்சி பி.வா.சா.ஆ2-ஐ நன்கு பார்வையிட்டு சேவூர் கிராமநிர்வாக அலுவலர் வழங்கியுள்ளார் என்றும், தேதி வருடம் சரியாக தெரியவில்லை என்றும் கூறுகிறார். 28.9.2007-க்கு முன்பாக வழக்கு சொத்தின் ஆவணங்கள் அனைத்தும் வாதிகளின் தாயார் சாந்தாராணி பெயரில் இருந்துவந்தது என்றால் சரிதான்.

2. மேற்படி வாதிகளின் தாயார் சாந்தாராணி பெயரில் தான் குடிநீர் கட்டண ரசீது, வீட்டுவரி ரசீது, மின்கட்டண அட்டை ஆகியவைகளும் இருந்து வந்தது என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களின் அசல்கள் அனைத்தும் வாதிகளின் தாயார் சாந்தாராணி பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி பதில் கூறாமல் அமைதியாக இருந்தார். என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட தமிழ்நாடு அரசு 1905ம் வருடத்தில் 3வது சட்டத்தைச்சேர்ந்த 5வது பிரிவின்படிக்கான நோட்சின் (எண்ணிககை-5) அசல்கள் சாந்தாராணி பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நோட்சின் அசல் ஆவணங்கள் (எண்ணிக்கை-5) வா.சா.ஆ54 ஆகும்.

3. இவ்வழக்கில் வாதிகள் வழக்கு சொத்தை என்பெயரில் மாற்றம் செய்ய சம்மதம் தெரிவித்ததை காட்ட ஏதேனும் ஆவணங்களை நான்இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. வாதிகளின் தாயார் சாந்தாராணியாவது அவ்வாறு ஏதேனும் ஆவணங்களை எனக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளாரா என்றால் வாய்மொழியாகத்தான் கூறினார். என் மாமியார் சாந்தாராணிக்கு வாதிகள் மட்டுந்தான் வாரிசுகளா என்றால் சரிதான். வழக்கு சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் ரூ.2,00,000/- இருக்கும். அப்போது இவ்வழக்கு போடும்போது ரூ.1,00,000/- இருந்திருக்கும் என்றால் சரிதான்.,

4. என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தி 5-ல் பஞ்சாயத்து நடைபெற்றதாக கூறியுள்ள நிலையில், எந்த இடத்தில், யார் முன்னிலையில் நடைபெற்றது என்று கூற இயலுமா என்றால் அப்துல்லாபுரம் மற்றும் சேவூர் கிராமத்தில் நடந்தது, மாமா கார்த்திகேயன் அவர் தற்பொழுது உயிருடன் இல்லை, அப்துல்லாபுரத்தில் உள்ள சித்தப்பா பெயர் தற்பொழுது சரியாக ஞாபகமில்லை அவர் உயிருடன் உள்ளார், தாத்தா வெள்ளையன் அவர் இறந்துவிட்டார், அதே ஊரைச்சேர்ந்த மற்றொரு சித்தப்பா பாபு, சங்கர் மற்றும் அத்தை கஸ்தூரி, பாட்டி பரிபூரணம், அதே ஊர் தலைவரான முத்துகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் நடந்தது.

5. எதற்காக மேற்படி பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் எனக்கும் 2ம் வாதி பாலமுருகனுக்கும் திருமணம் நடைபெற்று என்னைவிட்டு அவர் பிரிந்து சென்றுவிட்டதால் பஞ்சாயத்து நடைபெற்றது. மேற்படி பஞ்சாயத்து எந்த தேதி, மாதம், வருடம் நடைபெற்றது என்றால் தற்பொழுது எனக்கு சரியாக ஞாபகமில்லை. எந்த தேதி, மாதம், வருடம் பஞ்சாயத்து நடைபெற்றது என்ற விவரத்தை 2013-ல் நான் தாக்கல் செய்த எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. பஞ்சாயத்து நடைபெற்றபோது சாந்தாராணி சம்மந்தப்பட்ட இவ்வழக்கின் அசல் ஆவணங்களை பஞ்சாயத்தார்கள் என்னிடம் கேட்டார்களா என்றால் இல்லை.

6. எந்த சர்வே எண், எவ்வளவு பரப்பளவிற்கு பஞ்சாயத்து நடந்தது என்றால் சொத்தின் அளவு குறித்து பஞ்சாயத்து நடைபெறவில்லை. சர்வே எண்601 குறித்து தான் பஞ்சாயத்து நடைபெற்றது. அந்த சேவூர் கிராமசர்வே எண்.601-க்குத்தான் நான் இவ்வழக்கை எதிர்த்து

நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்தில் வாதிகள் கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். வாதிகள் பஞ்சாயத்தில் கலந்து கொண்டால் தான் நான் பஞ்சாயத்திற்கு வருவேன் என்று நான் கூறினேனா என்றால் சரிதான். 2ம் வாதி பஞ்சாயத்தில் கலந்துகொண்டார்.

7. எந்த பஞ்சாயத்தில் 2ம் வாதி பாலமுருகன் பங்குகொண்டார் என்றால் மேற்படி இரண்டு பஞ்சாயத்து நடந்தபோது அவர் கலந்துகொண்டார். எனது முதல் திருமண நாளிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து பஞ்சாயத்து நடந்தது என்றால் 2 வாரத்திற்கு பிறகு நடந்தது. என்னுடைய எதிர்வழக்குரையில் 2ம் வாதி பாலமுருகன் பஞ்சாயத்தில் கலந்து கொள்ளாமல் ஓடிவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட என் பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

8. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை யார் எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சாட்சி தற்பொழுது பத்திரம் எழுதிகொடுக்கவில்லை வாய்மொழியாகத்தான் என்அத்தை சாந்தாராணி கூறினார் என்று கூறுகிறார். வழக்கு சொத்தில் சாந்தாராணிக்குத்தான் உரிமை உள்ளது என்றால சரிதான். வழக்கு சொத்து குறித்து மேற்படி சாந்தாராணி என்பெயருக்கு கிரைய ஆவணமோ, தானசெட்டில்மெண்ட் ஆவணமோ பொது அதிகார ஆவணமோ எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சாந்தாராணி பெயரிலிருந்து இவ்வழக்கின் அசல் ஆவணங்களை நான் தேடிப்பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

9. மேற்படி சாந்தாராணி வாதிகளுடன் சேர்ந்து என்னை அழைத்துக்கொண்டு காட்பாடி வட்டாட்சியரிடமோ, குடியாத்தம் வட்டாட்சியரிடமோ அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. மேற்படி சாந்தாராணி உயிருடன் இருக்கும்வரை 2ம் வாதி பாலமுருகனுடன் காட்பாடி வட்டாட்சியரிடமோ, குடியாத்தம் வட்டாட்சியரிடமோ என்னுடன் அழைத்து சென்று அவர்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு நானும் என்தந்தையாரும் சென்று மேற்படி

அதிகாரிகளை பார்த்துள்ளோமா என்றால ் இல்லை. மேற்படி சாந்தாராணி வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றம் செய்வது குறித்து ஆட்சேபணை செய்யவில்லை என்று நான் கூறியுள்ளதற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வாய்மொழியாகத்தான் கூறினார்.

10. சாந்தாராணி ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்று நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது சேவூர் கிராம சர்வே எண்.601 சம்மந்தமாகத்தான் என்றால் சரிதான். இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்து நீதிமன்ற அழைப்பாணை பெற்றபிறகு தான் இவ்வழக்கு சர்வே எண், அளவுகள் மற்றும் நாற்புற எல்லைகள் பற்றி எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரிதான். 2010 முதல் இன்றைய தேதிவரை வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களும் என்பெயரில் இல்லை என்றால் பி.வா.சா.ஆ1 மட்டுமே உள்ளது.

11. நான் மேற்சொன்ன பஞ்சாயத்து 2004 அல்லது 2005-ல் நடைபெற்றிருக்குமா என்றால் சரிதான். அவ்வாறு பஞ்சாயத்து நடைபெற்ற போது நான் மறுமணம் செய்துகொண்டது சம்மந்தமாக ஏதேனும் பஞ்சாயத்தார்கள் பேசினார்களா என்றால் இல்லை. நானும் அந்த பஞ்சாயத்தின்போது என்னுடைய மறுமணம் பற்றி நான் பேசவில்லை என்றால் சரிதான். என்னுடைய 2வது திருமணம் எந்த வருடம் நடைபெற்றது என்றால் 10.2.2008. அதற்குரிய திருமண அழைப்பிதழை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 2வது திருமணம் எங்கு நடைபெற்றது என்றால் ஆற்காட்டில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. சேவூரில் உள்ள கிராம மக்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் தான்மேற்படி திருமணம் நடைபெற்றதா என்றால் சரிதான்.

12. 2வது திருமணம் செய்வதற்கு முன்பு என் இரண்டாவது கணவரிடம் எனக்கு நடந்த முதல் திருமணத்தைப்பற்றியும், அவரிடமிருந்து நான் விவாகரத்து பெறவில்லை என்பது பற்றியும்

தெரிவித்தபின்பு தான் 2வது திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். எனது முதல் திருமணத்தை விவாகரத்து செய்ய நீதிமன்றத்தில் நான் வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரையிலும், எனது முதல்விசாரணைவாக்குமூலத்திலும் எனது 2வது திருமணத்தை பற்றியும் அதில் பிறந்த குழந்தைகள் பற்றியும் எந்த சங்கதிகளையும் நான் குறிப்பிடவில்லை என்றால் ஆம். ஏன் மேற்படி தகவலை நான் அவ்வாறு குறிப்பிடாமல் மறைத்துள்ளேன் என்றால், அது குறித்து என் வழக்கறிஞர் கேட்கவில்லை என்பதால் தான் கூறவில்லை.

13. வாதிகள் எதற்காக இவ்வழக்கிட்டுள்ளார்கள் என்றால் வழக்கு சொத்தின் வீட்டிற்கும் அது அவர்களுக்கு உரியது என்று கூறியும் இவ்வழக்கை போட்டுள்ளார்கள். நான் நடந்ததாக சொல்லும் மேற்படி பஞ்சாயத்து எதேனும் ஆவணங்கள் எழுதி அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. 2ம் வாதி பாலமுருகன் யாரோ ஒருவருடன் ஓடிவிட்டதாக சொல்லும் அந்த குடும்பத்தினரிடம் பஞ்சாயத்து குறித்து தகவல் ஏதேனும் தெரியபடுத்தினேனா என்றால் அந்த பெண்ணின் பெற்றோர்களிடம் நான் கூறவில்லை. என் பெற்றோர்கள் கூறினார்கள்.

14. என்பெற்றோரின் சாவடி மேட்டுத்தெருவில் உள்ள முகவரி என்ன என்றால் கதவு எண். 3/133. எனது முதல் திருமணத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் என்பெற்றோர்கள் வீட்டில் இருந்தேன் என்றால் ஒருவாரம். என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அக்குவிடுதலைப்பத்திரம் யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் என் மாமா 2ம் வாதி பாலமுருகன் எனக்கு எழுதிகொடுத்தார். அந்த அக்குவிடுதலைப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. அந்த பத்திரம் எந்த சொத்து சம்மந்தப்பட்டது என்றால் இவ்வழக்கு சொத்து சம்மந்தப்பட்டது.

15. இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது 2ம் வாதி பாலமுருகன் அவருக்கு உரிய 1/2 பாக சொத்தை எனக்கு எழுதி கொடுத்ததாக நான் கூறுகிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணம்

ஏற்படுத்திக்கொடுத்த 5, 6 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். வழக்கு சொத்தின் மீதி 1/2 பாகம் 1ம் வாதி ஹரிபாபுவிற்கு பாத்தியப்பட்டிருக்கும்போது அவரிடமிருந்து நான் அக்குவிடுதலைப்பத்திரம் கேட்டு வாங்க 2ம் வாதி மூலம் நான் முயற்சி செய்தேனா என்றால் இல்லை. 1ம் வாதியிடமிருந்து வழக்கு சொத்தி மீதி 1/2 பாகத்தை எனக்குத்தான் விற்க வேண்டும் என்று முன்னுரிமை கோரி வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை.

16. நான் சொல்லும் அக்குவிடுதலைப்பத்திரத்தில் என்தந்தையாரோ அல்லது வேறு யாரேனும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் நான் கூறியுள்ள பஞ்சாயத்து எந்த காலகட்டத்திலும் நடைபெறவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஜீவனாம்சத்திற்காக வழக்கு சொத்தானது கொடையாக வழங்கப் படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கட்டிடமானது எத்தனை வருடங்கள் பழமையானது என்றால் நான் சிறுவயது முதலே அந்த கட்டிடம் உள்ளது. வழக்கு சொத்து சாந்தாராணிக்கு பிறகு அவரது வாரிசுகளான வாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

17. வழக்கு சொத்து எனக்குத்தான் பாத்தியப்பட்டது என்பதற்கு தனியே ஏதேனும் நான் வழக்கு போட்டுள்ளேனா என்றும் எதிர் கோருரிமை கேட்டு இவ்வழக்கில் கோரியுள்ளேனா என்றால் இவ்வழக்கில் கோரி எதிர்வழக்காடி வருகிறேனே தவிர தனியே எந்த வழக்கும் போடவில்லை. சாந்தாராணியின் தாயார் பெயர் சுந்தரம்மாள் (எ) கொல்லாபுரி அம்மாள். அவர் உயிருடன் இல்லை. அவர் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. அவர் உயிருடன் இருந்த காலகட்டத்தில் யாருடன் இருந்தார் என்றால் என் அத்தை சாந்தாராணியுடன் இருந்தார்.

18. நான் மேற்சொன்ன அப்துல்லாபுர பஞ்சாயத்தில் மேற்படி சுந்தரம்மாள் பங்குகொண்டாரா என்றால் ஆம். நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும்

பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

(2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.